தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **4-5-2016**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கோடையில் காய்கறிகளின்விலைநிலவரம்

இந்தியாவின் வேளாண் பருவநிலை, அனைத்து வகையான பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டு முழுவதும் கிடைக்க ஏதுவாக அமைந்துள்ளது. உலகளவில் இந்தியா பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தப்படியாக இரண்டாம் இடம் பிடித்துள்ளது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் (NHB) தகவல் படி, **2014-15** ஆம் ஆண்டில் காய்கறிகள் **95.42** இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு **1694.78** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. NHBயின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி **2015-16**ஆம் ஆண்டில் காய்கறிகள் **94.65** இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு **1685.06** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தியாவில், மேற்கு வங்காளம், உத்திரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம், ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, குஜராத், ஒடிசா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகியமாநிலங்கள் காய்கறிகள் உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும்.

காய்கறி உற்பத்தி மிகுதியால் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இந்தியா **2014-15**ஆம் ஆண்டில், ரூ.**4702.78** கோடி மதிப்பிற்கு காய்கறிகளை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியாவிலிருந்து பழங்கள் மற்றும் காய்கறிகள் ஐக்கிய அரபு நாடுகள், வங்காளம், மலேசியா, ஐக்கியநாடுகள், நெதர்லாந்து, பாகிஸ்தான், சவுதிஅரேபியா, இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

பழங்கள் மற்றும் காய்கறிகளின் தேவை இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் அதிகரித்துள்ளது. இந்தியாவில் பழங்கள் மற்றும் காய்கறிகளின் தேவை ஆண்டிற்கு 2 – 3 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் காய்கறிகள் கடந்தாண்டை விட குறைவாகவே பயிரிடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தாண்டு உற்பத்தி அதிகரித்து காணப்படுகிறது. மேலும் மைசூர் மற்றும் பெங்களூரிலிருந்து வரும் காய்கறிகள் தமிழகத்தின் தேவையை பூர்த்தி செய்கின்றது.

இந்நிலையில் மே – சூலை மாதங்களில் நிலவும் காய்கறிகளின் விலைநிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் உழவர் சந்தைகளில் கடந்த 12 ஆண்டுகளாக நிலவிய காய்கறி விலை விவரங்களின் மூலம் சந்தைஆய்வுகளை மேற்கொண்டது.

**தக்காளி**

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் தகவல் படி 2014-15 ஆம் ஆண்டில் தக்காளி 7.67 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 163.85 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ப்பட்டுள்ளது. முன்கூட்டிய மதிப்பீட்டின் படி 2015-16 ஆம் ஆண்டில் தக்காளி 7.77 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 182.86 இலட்சம் டன்கள் உற்பத்திசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 2014-15 ஆம் ஆண்டில் 0.25 இலட்சம் எக்டர் பரப்பளவில் 3.28 இலட்சம் டன்கள் தக்காளி உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் வேலூார், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவை தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், கோயம்புத்தூரில் தக்காளியின் பண்ணை விலை கோடை காலங்களில் கிலோவிற்கு ரூ.18 - 20 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## கத்தரி

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் தகவல் படி 2014-15 ஆம் ஆண்டில் கத்தரி 6.73 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 125.89 இலட்சம் டன்கள் உற்பத்திசெய்ப்பட்டுள்ளது. முன்கூட்டிய மதிப்பீட்டின் படி 2015-16 ஆம் ஆண்டில் கத்தரி 6.70 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 127.80 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 2014-15 ஆம் ஆண்டில் 0.11 இலட்சம் எக்டர் பரப்பளவில் 1.05 இலட்சம் டன்கள் கத்தரி உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திண்டுக்கல், கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், தேனி, புதுக்கோட்டை, வேலூர், மற்றும் திருப்பூர் ஆகியவை கத்தரி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், கோயம்புத்தூரில் கத்தரியின் பண்ணை விலை கோடை காலங்களில் கிலோவிற்கு ரூ.22 - 24 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## வெண்டை

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் தகவல் படி 2014 - 15 ஆம் ஆண்டில் வெண்டை 5.04 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 57.09 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ப்பட்டுள்ளது. முன்கூட்டியமதிப்பீட்டின் படி 2015-16 ஆம் ஆண்டில் வெண்டை 5.04 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 57.94 இலட்சம் டன்கள் உற்பத்திசெய்யப்படும் என்றுஎதிர்பார்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 2014-15 ஆம் ஆண்டில் 0.08 இலட்சம் எக்டர் பரப்பளவில் 0.57 இலட்சம் டன்கள்வெண்டைஉற்பத்திசெய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திண்டுக்கல், கோயம்புத்தூர், சேலம், வேலூார், காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரிஆகியவைவெண்டைஉற்பத்திசெய்யும் முக்கியமாவட்டங்களாகும்.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், கோயம்புத்தூரில் வெண்டையின் பண்ணை விலை கோடை காலங்களில் கிலோவிற்கு ரூ.23 - 25 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

*எனவே விவசாயிகள் மேற்கண்ட காய்கறிகளின் கோடை கால விலை முன்னறிவிப்பின் படி தக்க முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.*

**மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள**

*உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,*
*வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,*
*தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக் கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி: 0422 -2431405*

**மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்குதொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*காய்கறிப் பயிர்கள் துறை,*
*தோட்டக்கலைக் கல்லூரிமற்றும் ஆராய்ச்சிநிலையம்,*
*தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர்-641 003.*
*தொலைபேசிஎண் - 0422-6611374, 0422-6611283.*

*உதவி மக்கள் தொடர்பு அலுவலர்*